## ABSTRACT

Forests – Tiruchirappalli district – Thuraiyur taluk – No.12, Thenparanadu village – Thenparanadu forest block - Survey No.213 - An extent of 10.92.5 Hectare – Declaration under section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882) – Notification - Approved – Orders - Issued.

---

**Environment, Climate Change and Forests (FR.13) Department**

**G.O.(Ms) No.123**

**Dated: 23.07.2024**
**குரோதி, ஆடி - 07**
**திருவள்ளுவர் ஆண்டு - 2055**

**Read:**

From the Principal Chief Conservator of Forests (Head of Forest Force) Chennai – 32, Letter No. TS2/6033/2017, dated 05.06.2017 and 30.12.2022.

-------

**ORDER**:

The proposal received from the Principal Chief Conservator of Forests for publication of Notification for notifying an area of 10.92.5 Hectare situated in Survey Number 213, Thenparanadu forest block, No.12, Thenparanadu village, Thuraiyur taluk, Tiruchirappalli district under section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), is approved and accordingly the appended Notifications will be published in English in the Tamil Nadu Government Gazette, Dated 28.08.2024 and in Tamil in the Tiruchirappalli District Gazette, Dated 11.09.2024.

2. The Works Manager, Government Central Press, Chennai-1 is requested to ensure that the Notifications are published in the Tamil Nadu Government Gazette, Dated 28.08.2024. On receipt of Notifications, the Branch Manager, Government Branch Press, Tiruchirappalli is requested to take action to publish them in the Tiruchirappalli District Gazette.

3. They shall ensure that after publication, printed copies of said Notification in English and Tamil are communicated to the Officers as shown in the Annexure to this order.

..2.

4. The District Collector, Tiruchirappalli and the Principal Chief Conservator of Forests are requested to watch the publication of the Notifications and bring to the notice of the Government, delay if any, in publication.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**P.SENTHILKUMAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

To
The Works Manager,
Government Central Press, Chennai – 1.
The Branch Manager,
Government Branch Press, Tiruchirappalli.
The Additional Chief Secretary/
Commissioner of Land Administration, Chennai – 5.
The Principal Chief Conservator of Forests
(Head of Forest Force),
Chennai – 32.
The District Collector, Tiruchirappalli.
The Conservator of Forests, Tiruchirappalli.
The District Forest Officer, Tiruchirappalli.
The Forest Settlement Officer, Tiruchirappalli.

**Copy to**:-

The Revenue and Disaster Management (L.D.4) Department, Chennai – 9.
The Law (E,CC&F-Sty) Department, Chennai – 9.
The Private Secretary to Principal Secretary to Government,
Environment, Climate Change and Forest Department, Chennai-9.
Stock File/Spare Copy.

**//FORWARDED BY ORDER//**

S. Mohamed Yusuf 23/7/2024

SECTION OFFICER

23/07/2024

**Annexure to G.O.(Ms)No.123**

**Environment, Climate Change and Forest (FR.13) Department,**

**Dated: 23.07.2024**

| Sl. No. | Designation and Address of the Officers | English | Tamil |
|---|---|---|---|
| 1. | The Principal Secretary to Government, Environment, Climate Change and Forest Department, Chennai – 600 009. | 2 | 2 |
| 2. | The Principal Chief Conservator of Forests (Head of Forest Force), Chennai - 600 032. | 3 | 3 |
| 3. | The District Collector, Tiruchirappalli | 2 | 2 |
| 4. | The District Forest Officer, Tiruchirappalli | 12 | 12 |
| 5. | The Conservator of Forests, Tiruchirappalli | 5 | 5 |
| 6. | The Forest Settlement Officer, Tiruchirappalli | 8 | 8 |

**P.SENTHILKUMAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

S. Mohamed Yusuf 23/7/2024

Section Officer

23/07/2024

## APPENDIX.

## NOTIFICATION – I.

In exercise of the powers conferred by section 4 of the Tamil Nadu Forest Act 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby declares that it is proposed to constitute the land within the boundaries specified in the Schedule below as a reserved forest and appoints the Special Tahsildar (Forest Settlement), Tiruchirappalli, as ex-officio to be the Forest Settlement Officer to exercise the powers under clause (c) of the said section in respect of the said area.

## THE SCHEDULE.

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the district | : | Tiruchirappalli |
| 2. | Name of the taluk | : | Thuraiyur |
| 3. | Number and name of the village | : | 12, Thenparanadu |
| 4. | Name of the forest block | : | Thenparanadu forest block |
| 5. | Survey Number | | 213 |
| 6. | Total Extent of the forest block | : | 10.92.5 Hectare |

## BOUNDARIES.

**North**.- The boundary of the forest block is starting from the tri-junction point of Survey Numbers 105, 213 of No.12, Thenparanadu village and Senkattupatti reserve forest. Thence, the boundary generally runs towards east along the southern side of Survey Numbers 105 and 210, west, south and eastern side of Survey Number 211, southern side of Survey Number 210, south and eastern side of Survey Number 212 and reaches the tri-junction point of Survey Numbers 212, 214 and 213 of No.12, Thenparanadu village.

**East**.- Thence, the boundary generally runs towards south along the western side of Survey Number 214, west and southern side of Survey Number 216, western side of Survey Numbers 217, 218 and 224 of No.12, Thenparanadu village and it reaches the tri-junction point of Survey Numbers 224, 226 and 213 of No.12, Thenparanadu village.

**South**.- Thence, the boundary generally runs towards west along the north and western side of Survey Number 226, northern side of Survey Numbers 227, 220 and 229 of No.12, Thenparanadu village and it reaches the tri-junction point of Survey Numbers 213, 229 of No.12, Thenparanadu village and Senkattupatti reserved forest.

**West**.- Thence, the boundary generally runs towards north along the eastern side of Senkattupatti reserved forest and reaches the starting point.

## NOTIFICATION – II.

In exercise of the powers conferred by the last paragraph of section 4 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby appoints the District Forest Officer, Tiruchirappalli Forest division, Tiruchirappalli as ex-officio to attend on behalf of the Government at the inquiry prescribed under

..6.

Chapter-II of the said Act, in respect of the land of Thenparanadu forest block proposed to be constituted as a reserved forest.

**NOTIFICATION – III.**

In exercise of the powers conferred by section 14 of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby appoints the Personal Assistant (General) to the Collector of Tiruchirappalli District, Tiruchirappalli as ex-officio to hear appeals, if any, against the orders passed under sections 11, 12 and 13 of the said Act in respect of the land of Thenparanadu forest block proposed to be constituted as a reserved forest.

**P.SENTHILKUMAR**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

//True Copy//

S. Mohamed Yusuf 23/7/2024
Section Officer
23/07/2024

**சுருக்கம்**

வனம் – திருச்சிராப்பள்ளி மாவட்டம் – துறையூர் வட்டம் – எண்.12, தென்பரநாடு கிராமம் – தென்பரநாடு வன வட்டாரம் – நில அளவை எண்.213-ல் உள்ள 10.92.5 எக்டேர் நிலம் – தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 4-ன் கீழ் அறிவிக்கை செய்தல் – ஆணை- வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.13) துறை**

**அரசாணை (நிலை) எண். 123** நாள்: 23.07.2024

குரோதி, ஆடி - 07

திருவள்ளுவர் ஆண்டு - 2055

**படிக்க:**

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை-32. கடித எண்.டிஎஸ்2/6033/2017, நாள். 05.06.2017 மற்றும் 30.12.2022.

=======

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், எண்.12, தென்பரநாடு கிராமம், தென்பரநாடு வன வட்டாரம், நில அளவை எண்.213-ல் உள்ள 10.92.5 எக்டேர் நிலத்தினை தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 4-ன் கீழான அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது. அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள் 28.08.2024-ல் ஆங்கிலத்திலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரசிதழ் நாள் 11.09.2024-ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

..2.

2. 28.08.2024-ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அரசிடமிருந்து அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறும் திருச்சிராப்பள்ளி அரசு கிளை அச்சக மேலாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய மற்றும் கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை - 1
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், திருச்சிராப்பள்ளி.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர்,
நில நிர்வாகம், சென்னை - 5
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்),
சென்னை – 32.
மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி.
வனப்பாதுகாவலர், திருச்சிராப்பள்ளி.
மாவட்ட வன அலுவலர், திருச்சிராப்பள்ளி.
வன நிர்ணய அலுவலர், திருச்சிராப்பள்ளி.

..3.

<u>நகல்</u>:-
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD-IV) துறை,
சென்னை-9.
சட்டத் (E,CC&F-Sty) துறை, சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அ. செல்வி 23/7/2024
பிரிவு அலுவலர்
23/07/2024

**அரசு ஆணை (நிலை) எண். 123**

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.13) துறை,**

**நாள். 23.07.2024-ன் இணைப்பு**

| வ. எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1. | அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை – 9. | 2 | 2 |
| 2. | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், (வனத்துறைத் தலைவர்), சென்னை-32. | 3 | 3 |
| 3. | மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி | 2 | 2 |
| 4. | மாவட்ட வன அலுவலர், திருச்சிராப்பள்ளி | 12 | 12 |
| 5. | வனப்பாதுகாவலர், திருச்சிராப்பள்ளி | 5 | 5 |
| 6. | வன நிர்ணய அலுவலர், திருச்சிராப்பள்ளி | 8 | 8 |

ப.செந்தில்குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

23/7/2024.
பிரிவு அலுவலர்
23/07/2024

## பிற்சேர்க்கை.

## அறிவிக்கை - I.

1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 4-ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் கீழே உள்ள விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்குட்பட்ட நிலப்பகுதியை "காப்பு வனமாக" அமைக்கக் கருதியுள்ளதாக இதனால் அறிவிக்கிறார். மேலும், அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், மேற்சொன்ன பிரிவின் (c) பகுதியின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்த திருச்சிராப்பள்ளி தனி வட்டாட்சியரை (வன நிர்ணயம்) அலுவல் முறையில் வன நிர்ணய அலுவலராக இதனால் நியமிக்கிறார்.

## விவர அட்டவணை.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | திருச்சிராப்பள்ளி |
| 2. | வட்டத்தின் பெயர் | : | துறையூர் |
| 3. | கிராமத்தின் எண் மற்றும் பெயர் | : | 12, தென்பரநாடு |
| 4. | வனவட்டாரத்தின் பெயர் | : | தென்பரநாடு வன வட்டாரம் |
| 5. | நில அளவை எண் | : | 213 |
| 6. | வனவட்டாரத்தின் மொத்தப் பரப்பளவு | : | 10.92.5 எக்டர் |

## நாற்புற எல்லைகள்.

**வடக்கு**.- இவ்வன வட்டாரத்தின் எல்லையானது எண்.12, தென்பரநாடு கிராம நில அளவை எண்கள் 105, 213 மற்றும் செங்காட்டுப்பட்டி காப்பு வனம் ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பிலிருந்து தொடங்குகிறது. இங்கிருந்து இவ்வெல்லையானது பொதுவாக கிழக்கு நோக்கி, நில அளவை எண்கள் 105 மற்றும் 210-இன் தெற்காகவும், நில அளவை எண்.211-இன் மேற்கு, தெற்கு மற்றும் கிழக்காகவும், நில அளவை எண்.210-இன் தெற்காகவும், நில அளவை எண்.212-இன் தெற்கு மற்றும் கிழக்காகவும் சென்று எண்.12, தென்பரநாடு கிராம நில அளவை எண்கள் 212, 214 மற்றும் 213 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

**கிழக்கு**.- பின்னர், இவ்வெல்லையானது பொதுவாக தெற்கு நோக்கி நில அளவை எண்.214-இன் மேற்காகவும், நில அளவை எண்.216-இன் மேற்கு மற்றும் தெற்காகவும், எண்.12, தென்பரநாடு கிராம நில அளவை எண்கள் 217, 218 மற்றும் 224-இன் மேற்காகவும் சென்று எண்.12, தென்பரநாடு கிராம நில அளவை எண்கள் 224, 226 மற்றும் 213 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

**<u>தெற்கு</u>**.- பின்னர், இவ்வெல்லையானது பொதுவாக மேற்கு நோக்கி, நில அளவை எண்.226-இன் வடக்கு மற்றும் மேற்காகவும், எண்.12, தென்பரநாடு நில அளவை எண்கள் 227, 220 மற்றும் 229 ஆகியவற்றின் வடக்காகவும் சென்று, எண்.12, தென்பரநாடு கிராம நில அளவை எண்கள் 213, 229 மற்றும் செங்காட்டுபட்டி காப்பு வனம் ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்புப் புள்ளியை அடைகிறது.

**<u>மேற்கு</u>**.- பின்னர், இவ்வெல்லையானது, பொதுவாக வடக்கு நோக்கி, செங்காட்டுப்பட்டி காப்பு வனத்தின் கிழக்கு புறமாக சென்று தொடக்கப் புள்ளியை அடைகிறது.

<u>அறிவிக்கை-II.</u>

1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 4-ஆம் பிரிவின் கடைசிப் பத்தியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், காப்பு வனமாக அமைக்கக் கருதியுள்ள தென்பரநாடு வன வட்டாரத்தை பொறுத்தவரையில், மேற்சொன்ன சட்டத்தின் II-ஆம் அத்தியாயத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள விசாரணையில் பதவி நிலையில் அரசு சார்பாக கலந்து கொள்ள, திருச்சிராப்பள்ளி மாவட்ட வன அலுவலரை அலுவல் முறையில் இதனால் நியமிக்கிறார்.

<u>அறிவிக்கை - III.</u>

1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 14-ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், காப்பு வனமாக அமைக்க கருதியுள்ள தென்பரநாடு வன வட்டாரம் பொறுத்தவரையில், மேற்சொன்ன சட்டத்தின் 11, 12 மற்றும் 13 ஆம் பிரிவுகளின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்கெதிராக மேல்முறையீடுகள் எவையேனும் செய்யப்பட்டால் அவற்றை விசாரணை செய்ய திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரை (பொது) அலுவல் முறையில் இதனால் நியமிக்கிறார்.

ப.செந்தில்குமார்
**அரசு முதன்மைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

23/7/2024.
பிரிவு அலுவலர்
23/07/2024